செய்தி வெளியீடு எண்: 47 நாள் : 15.01.2010

சபரிமலைக்குச் சென்று திரும்பிக்கொண்டிருந்த பக்தர்கள்; கேரள மாநிலம், இடுக்கி மாவட்டத்தில் புல்லுமலை என்ற இடத்தில் வனப்பகுதியில் திடீரென ஜீப் ஒன்று கூட்டத்திற்குள் பாய்ந்ததால் ஏற்பட்ட நெரிசலில் பலர் மரணம் அடைந்துள்ளனர். மரணம் அடைந்தவர்களுள் தமிழகத்தைச் சேர்ந்தவர்களும் உள்ளனர் என்று முதல் நிலைத் தகவல் மூலம் தெரிகிறது. மரணமடைந்தவர்களின் குடும்பங்களுக்கு தமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொண்டுள்ள முதலமைச்சர் கலைஞர் அவர்கள்; அந்த குடும்பங்கள் ஒவ்வொன்றிற்கும் தலா ஒரு இலட்சம் ரூபாய் நிவாரண நிதியாக வழங்கப்படும் என்றும், காயமடைந்தவர்களுக்கு தலா இருபத்தைந்தாயிரம் ரூபாய் வீதம் மருத்துவச் செலவிற்கு வழங்கப்படுமென்றும் அறிவித்துள்ளார்.

தேவையான மருத்துவ உதவிகளையும், ஆம்புலன்ஸ் வாகனங்களையும் விபத்து நடந்த இடத்திற்கு அனுப்பிட ஏற்பாடு செய்யும்படி தேனி மாவட்ட ஆட்சித்தலைவருக்கு முதலமைச்சர் கலைஞர் ஆணையிட்டுள்ளார்.

● * *

வெளியீடு—இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், செ—9.

●